# அறிவியல் கோளரங்கத்தை தியாகிகள் இலவசமாக பார்க்கலாம்

**புதுச்சேரி, ஆக. 14–**

லாஸ்பேட்டையில் உள்ள அறிவியல் கோளரங்கத்தை தியாகிகள் இலவசமாக பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து, அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

நாட்டின் 75ம் ஆண்டு சுதந்திர தின அமுதப் பெருவிழா வரும்17ம் தேதி வரை லாஸ்பேட்டை, அப்துல் கலாம் அறிவியல் மைய கோளரங்கத்தில் நடக்கிறது.

இந்நாட்களில், முன்னாள் ராணுவ வீரர்கள், விடுதலை போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அப்துல் கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தை இலவசமாக பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நாட்களில் கோளரங்கிற்கு வரும் பார்வையாளர்களுக்கு பிளாஸ்டிக் தடை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த துணிப்பை இலவசமாக வழங்கப்படுகிறது.

நேற்று விடுதலை வீரர்கள் தியாகத்தை போற்றும் வகையில், அது தொடர்பான திரைப் படங்கள் காலை 11.00 மணி, மாலை 3.00 மணி என இரு காட்சிகள், இம்மைய பள்ளி மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

நாளை (15) மற்றும் 16ம் தேதிகளில் காலை 6.00 மணிக்கு கோளரங்கத்தில் கொடியேற்றம் மற்றும் தேசபக்தி பாடல்களை பாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 17ம் தேதி விடுதலை குறித்த உரையாடல் நடக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நமது முரசு



முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் நினைவுநாளையொட்டி புதுவை அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளி மாணவர்கள் லாஸ்பேட்டை கோளரங்கத்தில் அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.